www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Roll no:03

தேர்வு எண் | | | | | | |

வகுப்பு : 6

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 30

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 7X1=7

1. தாய் மொழியில் படித்தால் -------- அடையலாம்.

(அ) பன்மை (ஆ) மேன்மை (இ) பொறுமை ஈ) சிறுமை

2. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ---------

(அ) அடுக்குகள் (ஆ) கூரை (இ) சாளரம் (ஈ) வாயில்

3. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -------

(அ) சிலம்பதிகாரம் (ஆ) சிலப்பதிகாரம் (இ) சிலம்புதிகாரம் (ஈ) சிலபதிகாரம்

4. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி --------

(அ) துருவப்பகுதி (ஆ) இமயமலை (இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

5. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------

(அ) இடன் + புறம் (ஆ) இடை + புறம் (இ) இடம் + புறம் (ஈ) இடப் + புறம்

6. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் -------

(அ) த (ஆ) தி (இ) தீ (ஈ) து

7. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ---------.

(அ) ஐந்து (ஆ) ஆறு (இ) எட்டு ஈ) பத்து

II. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 6x1=6

8. கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை ---------

(அலைத்தாள் / அழைத்தாள்)

9. கலைச்சொல் தருக.

Email --------

10. பிறமொழிக் கலப்பின்றி எழுதுக.

எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போகிறார்கள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

11. சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

கவிதை

12. சொற்றொடர் அமைத்து எழுதுக.

வாழ்நாள்

13. வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.

மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது

III. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 3x2=6

14. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

15. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

16. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?

17. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?

18. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

19. உங்கள் பொறுப்புகள் இரண்டனை எழுதுக.

IV. அடிபிறழாமல் எழுதுக. 1x3=3

20. 'தமிழுக்கும்'........ எனத் தொடங்கி 'விளைவுக்கு நீர்' என முடியும் 'இன்பத்தமிழ்' பாடலை எழுதுக.

V. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடை எழுதுக. 1x3=3

21. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?

22. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

VI. எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி: 1x5=5

23. அ) இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ) 'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com